# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : சமூகப் பிரச்சனைகள்

பகுதி : **வேலையின்மை**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# வேலையின்மை

**முன்னுரை:**

வேலையின்மை என்பது ஒருவர் வேலைசெய்ய விருப்பமும், தகுதியும் இருந்தும், வேலை கிடைக்காத நிலையைக் குறிப்பது ஆகும்.

அதிக அளவிலான வேலைவாய்ப்பின்மையானது ஒரு சமூக மற்றும் பொருளாதார பிரச்சினையாகும். வளங்களை சரியாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதாலும் பராமரிப்புச் செலவு மற்றும் உற்பத்தி இழப்பு அதிகமாவதாலும் இது ஒரு பொருளாதாரப் பிரச்சனையாகும். வேலையில்லாத் தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்தால் பாதிக்கப்படுவதாலும் இது ஒரு சமூக பிரச்சினையாகவும் கருதப்படுகிறது எனவே அதிக அளவிலான வேலைவாய்ப்பின்மையின் போது மக்கள் அதிக துயரத்திற்கு உள்ளாகின்றனர்.

**வேலையின்மையின் வகைகள்**

**அமைப்பு சார்ந்த வேலையின்மை**

1. இவ்வகை வேலைவாய்ப்பின்மை நாட்டின் பொருளாதார அமைப்பு, அதாவது தேவையான வேலைவாய்ப்பினை உருவாக்கத் தேவைப்படும் உற்பத்தித்திறன் இன்மையால் ஏற்படுகிறது.
2. வேகமாக வளரும் மக்கள் தொகைக்கு ஏற்ப ஏற்படுகிறது.
3. இவ்வகை வேலையின்மை நீண்ட காலம் நீடிப்பவை.
4. இந்திய வேலைவாய்ப்பின்மை அடிப்படையில் இவ்வகையைச் சார்ந்துள்ளது.

**குறைவான வேலையின்மை**

1. வேலையாட்கள் தங்களது திறமை மற்றும் தகுதிக்கேற்ப வேலை வாய்ப்பினை பெறாதது.
2. அவர்கள் ஏதாவது ஒரு பணி செய்து, உற்பத்தித்திறன் குறிப்பிட்ட அளவில் இருப்பது.
3. ஒரு நாடு தனது பணியாட்களை சரியாக பயன்படுத்த தவறினால் இவ்வகை வேலைவாய்ப்பின்மை தோன்றும்.

**பகிரங்க வேலைவாய்ப்பின்மை**

1. வேலையாட்களுக்கு எவ்வித பணியுமின்றி இருப்பது, அத்துடன் பணிக்கான காலியிடம் இல்லாமல் இருப்பது, இவ்வகை வேலைவாய்ப்பின்மையில் வருகிறது.
2. படித்த வேலைவாய்ப்பற்றவர்கள் மற்றும் படிக்காத வேலையாட்கள் ஆகியோரும் இவ்வகையில் வருகிறார்கள்.
3. வேலைதேடி கிராமப்புறங்களிலிருந்து நகரத்திற்கு வருவது இந்தியாவில் நடைபெறுகிறது. இது இவ்வகை வேலைவாய்ப்பின்மைக்கு உதாரணம் ஆகும்.

**மறைவான வேலைவாய்ப்பின்மை**

1. ஒரு பணியாள் உற்பத்தியில் எவ்வகையிலும் பங்கு பெறாதது அல்லது அவரை பணியிலிருந்து நீக்கினாலும் உற்பத்தித்திறன் பாதிக்கப்படாதது இவ்வகை மறைவான வேலைவாய்ப்பின்மை யாக கருதப்படுகிறது.
2. அப்படிப்பட்ட வேலையில்லா நபரின் உற்பத்தித்திறன் பூஜ்ஜியம் ஆகும்.
3. விவசாயப் பிரிவு வளர்ந்து கொண்டிருக்கும் மற்றும் வளர்ந்த பொருளாதாரங்கள் ஆகியவைகளில் இவ்வகை வேலைவாய்ப்பின்மை அதிகம்.

**உராய்வு வேலைவாய்ப்பின்மை**

1. சந்தை நிலவரத்தைப் பொறுத்து வேலைவாய்ப்பின்மை தோன்றுதல் (தேவை மற்றும் வழங்களில் மாறுபாடு ஏற்படுவதால்).
2. இந்தியாவில் விவசாயம் முக்கியத் தொழில் உற்பத்தித் திறன் தற்போது வரைகால நிலையைப் பொறுத்தது. அதைப் போலவே தேவையும் கிடைக்கும் வளங்களைப் பொறுத்தது. ஏதாவது ஒன்றில் (தேவை (அ) வழங்கலில்) மாற்றம் ஏற்பட்டால் இரண்டின் சமநிலையும் பாதிக்கப்பட்டு உராய்வு வேலைவாய்ப்பின்மை தோன்றும்.

**பருவ வேலைவாய்ப்பின்மை**

1. மாறுபாடுகளைப் பொறுத்து தேவை குறையும் போது இவ்வகை வேலைவாய்ப்பின்மை உருவாகிறது. பணியாளர்கள் வருடம் முழுவதும் வேலை பெறாதது. விவசாயப் பணி நடைபெறும் சமயத்தில் மட்டுமே வேலைவாய்ப்பினை பெறுவது பின் வேலையிழப்பது போன்றவை நடைபெறும்.
2. இந்திய விவசாயம் 7 - 8 மாத வேலைவாய்ப்பிற்கு உறுதி அளிக்கிறது. மீதமுள்ள நாட்களில் வேலையாட்கள் பணியின்றி இருக்கிறார்கள். இவ்வகை தற்காலிக வேலைவாய்ப்பின்மை பருவகால வேலைவாய்ப்பின்மை எனப்படுகிறது.

## இந்தியாவின் வேலையின்மைக்கான காரணங்கள்

### மக்கள் தொகைப் பெருக்கம் :

1. நமது நாட்டில் வளர்ந்து வரும் வேளாண்மைச் சிக்கலுக்கான முதன்மைக் காரணம் விரைந்து பெருகும் மக்கள் தொகையாகும்.
2. வேலைசெய்கின்றவர்களின் எண்ணிக்கை கூடுகின்ற அளவுக்கேற்ப வேலை வாய்ப்புக்களை நமது ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் உருவாக்க இயலவில்லை.
3. இதனால் கூடுகின்ற மனிதர்கள் நாட்டிற்கு வளமாக இல்லாமல் சுமையாக மாறிவருகின்றனர்.

### வளர்ச்சி பெறாத வேளாண்மை :

1. நமது வேளாண்மைத் துறை வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு விரைந்து முன்னேறவில்லை உழைப்புச் செறிவுள்ள இத்துறையில் எதிர்பார்த்த புரட்சி நடைபெறவில்லை.
2. இதனால் மறைந்திருக்கும் வேலையின்மை இத்துறையில் தொடர்கின்றது.

### வளர்ச்சி குறைந்த பொருளாதாரம் :

1. இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதம் குறைவாக இருக்கின்றது. நமது நாட்டிலுள்ள மூலவளங்களை இன்னும் முழுமையாகவும் சரியாகவும் பயன்படுத்தவில்லை.
2. இங்குள்ள பல்வேறு துறைகளும் எதிர்பார்த்த வேகத்தில் வளரவில்லை. இதனால் போதுமான அளவில் வேலை வாய்ப்புக்கள் உருவாகவில்லை.

### குறைவான தொழில்களின் வளர்ச்சி :

1. நமது நாட்டில் மூலதனப் பற்றாக்குறையாலும், சட்ட நடைமுறைகளாலும் பெரிய தொழில்கள் வேகமாக வளரவில்லை.
2. வேலைவாய்ப்புள்ள சிறிய தொழில்களைப் பரவலாக நாடெங்கும் வளர்க்கத் தவறிவிட்டோம்.

### வேலைவாய்ப்புக்கான திட்டமிடாமை :

1. நமது ஐந்தாண்டுத் திட்டங்களில் வேலைவாய்ப்புக்களைப் பெருக்க சரியாகத் திட்டமிடவில்லை.
2. மனிதவளத் திட்டமிடல் (Man-Power Planning) இன்றும் கருத்தளவிலேயே உள்ளது. இருக்கின்ற மக்களின் தரத்தை ஒட்டி வேலை வாய்ப்பைப் பெருக்க தக்க திட்டம் இல்லாததால், சரியான முயற்சியும் இல்லை.

**ஆக்கத்திறனற்ற கல்விமுறை :**

1. இன்று நாம் வழங்குகின்ற பள்ளி-கல்லூரி கல்வி கற்றவர்களையும் பட்டதாரிகளையும் உருவாக்கு கின்றதே தவிர, அவர்களிடம் தொழில் நடத்தும் ஆக்கத்திறனையோ தன்னம் பிக்கையையோ வளர்க்க தவறி விட்டது.
2. இதனால் கற்றவர்கள் மற்றவர்களைச் சார்ந்து வாழும் நிலையே காணப்படுகின்றது. இதனால் படித்தவர் வேலையின்மை புதுவகைச் சிக்கலாய் உருவெடுக்கின்றது.

**தொழில் முனைவோர் இன்மை :**

1. நமது நாட்டில் போதுமான அளவில் தொழில் முயல்வோர் இல்லை.
2. சுய தொழிலில் ஈடுபடுபவர்கள் எண்ணிக்கையில் மிகுதியாக இருந்தால், அவர்கள் தங்களுக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொண்டு, அதன் மூலம் மற்றவர்களுக்கும் வேலையளிக்க முடியும்.

**எந்திரமயமாக்குதல் :**

சில துறைகளில் எந்திரமயமாக்குகின்ற போக்கு வளர்ந்து வருகின்றது. இவற்றால் வேலை வாய்ப்புக் குறைவதைக் காணலாம்.

**பகவதிக் குழுவின் பரிந்துரைகள் :**

1970 ஆம் ஆண்டு டிசம்பரில் இந்திய அரசு, வேலையின்மையின் அளவை மதிப்பிட்டு, அதனைத் தீர்க்க வழிமுறைகளைக் கூறி பகவதி (B. Bhagawati) தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அக்குழுவின் பரிந்துரைகள் பின்வருமாறு:

1. வேலைவாய்ப்பு, மனித வளத் திட்டமிடுதல், ஆகியவற்றிற்காக ஒரு தேசியக் குழுவை உருவாக்க வேண்டும்.
2. நாட்டின் வளர்ச்சிக்குரிய வளங்களில் ஒரு பகுதியை ஒதுக்கியும், கூடுதல் வரிவிதித்தும் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.
3. பெரிய அளவில் கிராம வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.
4. உழைப்புச் செறிவுடைய தொழில்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.
5. குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் (Over-Time) வேலை செய்வதைத் தடுக்க வேண்டும்.
6. வாரம் 48 மணிநேரமாக இருக்கும் உழைப்பினளவை 41 மணி நேரமாகக் குறைக்க வேண்டும்.

7. வேலைவாய்ப்புக் கல்வி முறையை உருவாக்க வேண்டும்.
8. வேலை வாய்ப்புக் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.
9. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த சரியான திட்டம் தேவை.
10. உழைப்புச் செறிவுள்ள ஏற்றுமதி செய்யும் தொழில்களுக்கு வரிச்சலுகை தேவை. பின்தங்கிய வட்டாரங்களை வளர்க்க வேண்டும்.

**வேலையின்மை கொள்கை**

தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பின்படி வேலைவாய்ப்பின்மையை மூன்றாக பிரிக்கலாம்.

**பொதுவான முதன்மை நிலை வேலையின்மை**

1. வருடத்தில் பாதி நாட்களுக்கு மேல் அதிகமான நபர்கள் வேலையில்லாத நிலையில் இருப்பதைக் குறிக்கும்.
2. இதற்கு வெளிப்படையான வேலையின்மை என்று பொருள்.

**வாராந்திர நிலை வேலையின்மை**

வாரத்திற்கு ஒரு மணி நேரம்கூட அதிகமான நபர்களுக்கு வேலைகிடைக்காமையைக் குறிக்கும்.

**தினமும் வேலையின்மை நிலை**

வாரத்தில் ஒரு நாள், சில நாட்கள் அதிகமான நபர்களுக்கு வேலையில்லாமையைக் குறிக்கும்.

**இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை புள்ளி விவரங்கள்**
**(மக்கள் தொகைக் கணக்கெடுப்பு - 2011)**

1. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 10 மில்லியன் இளநிலை பட்டதாரிகள், முதுநிலை பட்டதாரிகள் மற்றும் தொழில்நுட்ப பட்டதாரிகள் வேலைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். மொத்த இந்தியர்களில் 15% படித்தவர்கள் வேலைவாய்ப்பு தேடிக் கொண்டிருக்கின்றனர்.
2. கேரளாவில் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட படித்த பட்டதாரிகள் வேலை வாய்ப்பின்மை இன்றி இருக்கின்றனர்.
3. 116 மில்லியன் வேலை தேடிக் கொண்டிருக்கும் இந்தியர்களில் 32 மில்லியன் படிக்காதவர்கள் மற்றும் 84 மில்லியன் மக்கள் படித்தவர்கள் ஆவர்.

4. நகரங்களைவிட கிராமங்களிலேயே அதிக வேலைவாய்ப்பின்மைக் காணப்படுகிறது.
5. கல்வியின் ஒவ்வொரு நிலையிலும், குறிப்பாக ஆண் வேலைவாய்ப் பின்மையை விட பெண் வேலைவாய்ப்பின்மையே அதிகமாகக் காணப்படுகின்றது.
6. 2001ல் 6.8% இருந்த வேலைவாய்ப்பின்மையானது, 2011ல் 9.6% ஆக உயர்ந்தது. வேலையின்மையானது படிக்காதவர்களைவிட படித்தவர்களிடையே வேகமாக வளருகிறது.

**ஐந்தாண்டு திட்டங்களில் வேலைவாய்ப்புக் கொள்கை**

**7வது ஐந்தாண்டுத் திட்டம் (1985 – 1990)**

பொதுவான நிலை அடிப்படையில் வேலைவாய்ப்புகளையும் வளர்ச்சி வீதத்தை அதிகரித்தல்.

**8வது ஐந்தாண்டுத் திட்டம் (1992 – 97)**

1. கி.பி. 2000க்குள் ஆண்டுக்கு 3% வேலைவாய்ப்பை உருவாக்குதல்.
2. இதன் பொருட்டு பல்வேறு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**9வது ஐந்தாண்டு திட்டம் (1997 – 2002)**

வேளாண்மை, இந்தியாவின் பெரும் வேலைவாய்ப்பு களஞ்சியமாக விளங்குவதால், வேளாண்மையில் பொது முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் அதன்மூலம் அதிகப்படியான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (2002 – 2007)**

ஆண்டிற்கு 10 மில்லியன் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் 8% உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை அடைதல், மற்றும் வேலைவாய்ப்பு திட்டங்கள் மூலம் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்குதல் போன்றவை.

**பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007 –2012)**

1. நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்புகளை மேம்படுத்துதல்.
2. வளர்ச்சி குறைவான பகுதிகள், துறைகளில் வேலைவாய்ப்பினை அதிகரித்தல்.
3. நகர்ப்புற ஏழைகளுக்கும் வேலை காப்பீட்டை விரிவுபடுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**பனிரெண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் (2012 – 2017)**

1. உற்பத்தித்துறையில் வேலைவாய்ப் பினை அதிகப்படுத்துதல்.
2. இத்திட்டத்தில் மேலும் 10 மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குதல்

**முறைசாரா தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புச் சட்டம் - 2008**

1. கூலித் தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்பவர்கள் அல்லது சுய வேலைவாய்ப்பு பெறுவோர், மொத்த மக்கள் தொகையில் பெரும்பான்மை யாக உள்ளனர்.
2. நாட்டு உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு இவர்களது பங்களிப்பு ஆகும்.
3. இச்சட்டத்தின் கீழ் 2009ம் வருடம் புதிய நெறிமுறைகள் உருவாக்கப்பட்டன.
4. இதன்படி தேசிய சமூக பாதுகாப்பு ஆணையம் மற்றும் மாநில சமூக பாதுகாப்பு ஆணையம் போன்றவை ஆரம்பிக்கப்பட்டன.

**இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட திட்டங்கள்.**

1. ஆம் ஆத்மி பீமா யோஜனா
2. தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டம்
3. உடல் நல காப்பீட்டு திட்டம்

**வேலைவாய்ப்பு உருவாக்கம் தொடர்பாக/மாண்டேக் சிங் அலுவாலியா தலைமையிலான குழு:**

1. மத்திய திட்டக் குழு, மாண்டேக் சிங் அலுவாலியா தலைமையில், வேலை வாய்ப்பு, மற்றும் வேலையின்மை நிலை குறித்து அறிய ஒரு குழுமை நியமித்தது.
2. இக்குழு 2001 ம் ஆண்டில் அறிக்கை சமர்ப்பித்தது.

**அறிக்கையின் எடுகோள்கள்**

1. தனியார்த்துறை முதலீட்டின் மூலம் வேளாண்மையை ஊக்குவித்தல்.
2. உணவு தொழில் நுட்பத்தில் பெரிய நிறுவனங்களை ஈடுபட செய்தல்.
3. சில்லறை வர்த்தக துறையில் பெரிய நிறுவனங்களையும், புதிய யுக்திகளையும் அறிமுகப் படுத்துதல்.
4. போக்குவரத்து துறையை புதிய வரவு நிறுவனங்கள் மூலம் செயல்திறனை அதிகரித்தல்.
5. தொழிலாளர் சட்டங்களை சீரமைத்தல்.
6. ஒப்பந்த தொழிலாளர் (சீரமைப்பு மற்றும் தழை) சட்டத்தைத் திருத்தம் செய்தல்.

**எஸ். பி. குப்தா சிறப்பு குழு 2001 ம் ஆண்டு மத்திய அரசால் நியமிக்கப்பட்டது.**

**நோக்கம்**

10 மில்லியன் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வழிமுறைகளை ஆராய்தல்.

**அரசாங்க நடவடிக்கைகள்**

| வ. எண் | வேலைவாய்ப்புத் திட்டங்கள் | தொடங்கப்பட்ட ஆண்டு | நோக்கம் |
|---|---|---|---|
| 1. | கிராம வேலைவாய்ப்புப் பாதுகாப்புத் திட்டம் | 1972 | கிராம வேலைவாய்ப்பிற்கு |
| 2. | இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புப் பயிற்சியளித்தல் (TRYSEM) | 1979 | கிராம இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு பயிற்சி அளித்திடும் திட்டம் |
| 3. | ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டம் (IRDP) | 1980 | பின்தங்கிய கிராமத்தை சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் அனைத்து நிலைகளிலும் மேம்பாடு அடையச் செய்தல் |
| 4. | தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டம் | 1980 | பின்தங்கிய கிராமத்தில் இலாபம் ஈட்டக்கூடிய வேலைவாய்ப்புகளை வழங்குதல் |
| 5. | கிராம நிலமல்லாதோருக்கான வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் | 1983 | நிலமற்ற விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குதல். |
| 6. | படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்புத் திட்டம் | 1983 | சுய வேலைவாய்ப்பிற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்குதல் |
| 7. | நகர ஏழைகளுக்கு சுய வேலைவாய்ப்புத்திட்டம் | 1986 | மானிய உதவி மற்றும் வங்கி கடனுடதவி மூலம் நகர ஏழைகளுக்கு சுய வேலைவாயப்பளித்தல் |
| 8. | ஜவஹர் ரோஜ்கர் யோஜனா | 1989 | கிராமத்தில் வேலைவாய்ப்பற்றோருக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் |

| | | | |
|---|---|---|---|
| 9. | நேரு ரோஜ்கர் யோஜனா | 1989 | நகரத்தில் வேலைவாய்ப்பற்றோருக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் |
| 10. | நகர வேலைவாய்ப்பு கூலித்திட்டம் | 1990 | ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு குறைவாக உள்ள நகரங்களில் கூலி வேலைவாய்ப்பு வழங்குதல் |
| 11. | வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் | 1993 | கிராமங்களில் வருடத்திற்கு 100 நாட்கள் வேலைவாய்ப்பளித்தல் |
| 12. | சுவர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கர் யோஜனா | 1997 | கிராமப்புற வேலைவாய்ப்பினை வழங்குதல், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு வேலை அளித்தல் |
| 13. | சுவர்ண ஜெயந்தி கிராம் சுவரோஜ்கர் யோஜனா | 1999 | கிராம வறுமையை ஒழித்து சுய வேலைவாய்ப்பை வழங்குதல் |
| 14. | ஜெய்ப்பிரகாஷ் நாராயண் ரோஜ்கர் உறுதித்திட்டம் | 2002-03 | பின்தங்கிய மாவட்டங்களுக்கு வேலைவாய்ப்பு உறுதியளிதத்தல் |
| 15. | தேசிய கிராம வேலைவாய்ப்பு உறுதித்திடடம் | 2006 | கிராம பகுதிகளுக்கு 100 நாள் வேலைவாய்ப்பளித்தல் |
| 16. | சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா | 2001 | கிராமப்பகுதிகளில் கூடுதலான ஊதியம் மற்றும் உணவுக்கு உத்ரவாதம் அளித்தல் |
| 17. | உணவுக்கு வேலைத்திட்டம் | 2001 | வறட்சிபாதித்த 8 மாவட்டங்களில் வேலைவாய்ப்பு மற்றும் உணவுக்கு உறுதியளித்தல். |
| 18. | மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் | 2005 | |
| 19. | பிரதம மந்திரி வேலைவாய்ப்பு திட்டம் | 2008 | |

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டம் (Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme)

2008-ம் ஆண்டின் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டமானது, "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டமாக" பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**நோக்கம்:**

1. "உலகிலுள்ள திட்டங்களில் இது ஒரு பெரிய திட்டமாகும், ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப்பகுதிகளில் உடல்உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆண்டில் 100 நாட்கள் வேலைவாய்ப்பளிப்பதே இதன் நோக்கம்".
2. இரண்டாவதாக, ஒவ்வொரு குடும்பத்திற்கும் உடல் உழைப்பை வழங்கி வறுமை ஒழித்து, நிலையான மேம்பாட்டை அடைவதாகும்.

**பணிகள் தேர்வு செய்யும் முறை**

ஒவ்வொரு ஊராட்சியிலும் இத்திட்டவிதிமுறைகளின்படி மேற்கொள்ளப்பட உள்ள பணிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு கிராம சபையில் தீர்மானம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

**தகுதிகள்:**

1. வேலை செய்ய இயலுகின்ற உடல்திறன் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
2. அந்த ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
3. 18 வயது நிரம்பியிருக்க வேண்டும்.
4. பணிகளில் குறைந்தபட்சம் 33 சதவிகிதம் பெண்கள் பயனுற வாய்ப்பளிக்க வேண்டும்.
5. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் மட்டும் அல்லாமல் வேலைகோரும் மற்றவர்களும் வேலைபெற தகுதியானவர்கள்.

**நடைமுறை**

இத்திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 9 மணிநேரம் வேலை செய்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவு ஊதியம் வழங்கப்படும்.

**சிறப்பம்சங்கள் :**

1. குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948ன்படி, விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.
2. ஆண், பெண்களுக்குச் சம அளவிலான ஊதியம் வழங்கப்படும்.
3. வேலையின் போது விபத்து ஏற்பட்டு முழுமையான ஊனமுற்றாலும் அல்லது உயிரிழப்பு ஏற்பட்டாலும் ரூ.25,000/- இழப்பீடு தொகையாக வழங்கப்படும்.
4. 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
5. வழிகாட்டி நெறிமுறைகளின்படி, கிராமத்திற்கான திட்டத் தொகுப்பினை, கிராமசபை ஒப்புதல் அளித்தபின், அதில் 50% வேலைகள் கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த ஒதுக்கப்பட வேண்டும்.
6. வேலை நடைபெறும் இடங்களில், குடிநீர், நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

**இந்தியா / தமிழ்நாட்டின் வேலைவாய்ப்புத் திட்டங்கள்:**

| வரிசை எண். | திட்டங்கள் | ஆண்டு | நோக்கங்கள் |
|---|---|---|---|
| 1. | சமூக மேம்பாட்டுத் திட்டம் (CDP) | 1952 | ஊரகப் பகுதியில் வாழும் ஏழைமக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் மாற்றம் கொண்டு வருதல். |
| 2. | ஒருங்கிணைந்த வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (IADP) | 1960-61 | விவசாயிகளுக்கு கடன், விதைகள், உரங்கள் வழங்குதல் |
| 3. | ஒருங்கிணைந்த வேளாண்மைப் பகுதித் திட்டம் | 1964-65 | அறுவடையை மேம்படுத்துதல். |
| 4. | கடன் அங்கீகாரத் திட்டம் | 1965 | ரிசர்வ் வங்கியின் கடனளவு கட்டுப்பாட்டுத் திட்டம் |
| 5. | அதிக மகசூர் உற்பத்தித் திட்டம் | 1966-67 | உணவுதானியங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துதல். |
| 6. | இந்திய சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் | 1966 | நாட்டின் பல்வேறு பகுதிகள் உணவு மற்றும் பயணியர் விடுதியை உருவாக்குதல். |

| | | | |
|---|---|---|---|
| 7. | பசுமை புரட்சி | 1966-67 | உணவு தானியங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துதல், குறிப்பாக கோதுமை உற்பத்தியை அதிகப்படுத்துதல் |
| 8. | 14 வங்கிகளை தேசியமயமாக்குதல் | 1969 | விவசாயம், கிராம மேம்பாடு மற்றும் மற்ற முன்னுரிமைத் துறைகளுக்குக் கடன் வழங்குதல. |
| 9. | கிராம மின்மயமாக்கல் கழகம் | 1969 | கிராமப் பகுதிகளில் மின் மயமாக்குதல் |
| 10. | வீட்டுவசதி மற்றும் நகர மேம்பாட்டுக்கழகம் | 1970 | வீட்டுவசதியை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்ப உதவி மற்றும் கடனுதவி வழங்குதல். |
| 11. | முடுக்கிவிடப்பட்ட கிராம நீர் வழங்கும் திட்டம் | 1972-73 | கிராமப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்குதல் திட்டம். |
| 12. | வறட்சி பாதித்த பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 1973 | வறட்சி பாதித்தப் பகுதிகளை பாதுகாத்து, நிலப்பகுதி நீரை அதிகப்படுத்துதல் |
| 13. | கிராம விபத்து வேலைவாய்ப்புத் திட்டம் | 1972-73 | கிராம வேலைவாய்ப்பை மேம்படுத்த |
| 14. | வேளாண்மை மற்றும் குறுவிவசாயி தொழிலாளர் கழகம் | 1973-74 | விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் பொருளாதார உதவி அளித்தல். |
| 15. | சிறு விவசாயி மேம்பாட்டுக் கழகம் | 1974-75 | சிறு விவசாயிகளுக்கு தொழில்நுட்ப மற்றும் பொருளாதார உதவி அளித்தல். |
| 16. | 20 அம்சத்திட்டம் | 1975 | வறுமையை ஒழித்தல் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் |
| 17. | தேசிய கிராம மேம்பாட்டு நிறுவனம் | 1977 | கிராம மேம்பாட்டிற்கு பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்குதல் |
| 18. | பாலைவன மேம்பாட்டுத் திட்டம் | 1977-78 | பாலைவன விரிவடைதலைத் தடுத்து சுற்றுசூழலைப் பாதுகாத்தல். |

| | | | |
|---|---|---|---|
| 19. | உணவுக்கு வேலைதிட்டம் | 1977-78 | தொழிலாளர்களின் வேலைத்திறனை மேம்படுத்துவதற்கு அவர்களுக்கு உணவுதானியங்கள் |
| 20. | அந்தோதயா யோஜனா | 1977-78 | இராஜஸ்தான் மாநிலத்தில் ஏழை குடும்பங்களுக்கு நிதியுதவியளித்தல் |

**வினாக்கள்**

1. வேலையின்மையின் வகைகளை விளக்கி எழுதுக.
2. வேலையின்மைக்கான காரணங்கள் யாவை?
3. வேலைவாய்ப்புத் திட்டங்களில் முக்கியமானவற்றை குறிப்பிட்டு விவரி?